அவ்யக்த வருடத்தைக் கொண்டாடுவது என்றால் தந்தைக்கு நல்ல குழந்தை ஆகி நிரூபணம் காட்டுவது

இன்று அவ்யக்த தந்தை தம்முடைய அவ்யக்த மூர்த்தி குழந்தைகளோடு சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார். அவ்யக்தம் என்றால் வ்யக்த (சரீர) உணர்விலிருந்து விலகியும் அவ்யக்த தந்தைக்கு சமமாக அன்பானவராகவும் இருப்பது. குழந்தைகள் அனைவரும் விசேஷமாக இவ் வருடத்தை அது போல் தந்தைக்கு சமமாக ஆவதற்கான லட்சியம் வைத்துத் தங்கள் சக்திக் கேற்றவாறு மிக நன்றாகப் புருஷார்த்தம் செய்து கொண்டி ருக்கிறார்கள். லட்சியத்துடன் கூடவே லட்சணத்தையும் தாரணை செய்து சென்று கொண்டி ருக்கிறார்கள். பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் புருஷார்த்தத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். ஒவ்வொருவரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள் - இந்த சமமாக ஆவது தான் அன்பின் நிரூபணம். எனவே அது போல் நிரூபணம் கொடுக்கக் கூடிய குழந்தைகள் தாம் நல்ல தகுதியான குழந்தைகள் எனச் சொல்லப் படுகிறார்கள். ஆக, நல்ல குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா குஷியடையவும் செய்கிறார் மற்றும் விசேஷமாக அதிகப்படியான உதவியும் செய்கிறார்.

எவ்வளவு தைரியவான் ஆகிறீர்களோ, அவ்வளவு பாபாவின் உதவிக்குத் தகுதியுள்ளவர் ஆகிறீர்கள். அத்தகைய தகுதியான குழந்தைகளின் அடையாளம் என்ன? எப்படி பாபாவுக் காக மகிமையின் பாடல் உள்ளது - பாபாவின் பண்டாராக்கள் சதா நிறைந்திருக்கும். அதே போல் நல்ல குழந்தைகளின் பண்டாரா, எப்போதும் அனைவருடைய மனதின் அன்பின் ஆசிர்வாதங்களால், அனைவரின் சகயோகத்தின் அனுபூதிகளால், சர்வ கஜானாக்களால் நிரம்பப் பெற்றிருக்கும். எந்த ஒரு கஜானாவிலும் தன்னைக் காலியாக அனுபவம் செய்ய மாட்டார்கள். எப்போதும் அவர்களது மனதில் இருந்து இந்தப் பாடல் தானாகவே ஒலிக்கிறது - பாபாவின் குழந்தைகளாகிய நமது பண்டாராவில் கிடைக்காத பொருள் என்று எதுவுமே இல்லை. அவர்களது திருஷ்டி மூலம், விருத்தி மூலம், வைப்ரேஷன் மூலம், வாயின் மூலம், தொடர்பின் மூலம் சதா நிறைவான ஆத்மாக்களின் அனுபவம் ஏற்படுகிறது. அத்தகைய குழந்தைகள் சதா பாபாவின் துணையாகவும் உள்ளனர், துணைவராகவும் உள்ளனர். இந்த இரட்டை அனுபவம் இருக்க வேண்டும். சுயத்தின் ஈடுபாட்டில் சதா துணையின் அனுபவம் செய்கின்றனர் மற்றும் சேவையில் சதா துணைவரின் ஸ்திதி யினுடைய அனுபவம் செய்கின்றனர். இந்த இரண்டு அனுபவங்களும், துணைவர் மற்றும் துணையின் அனுபவம் தானாகவே பாப்-சமான் சாட்சி, அதாவது விலகிய மற்றும் அன்பானவர் ஆக்கி விடுகிறது. எப்படி பிரம்மா பாபாவைப் பார்த்தீர்கள் - பாபாவுடன் இணைந்த ரூபத்தில் சதா அனுபவம் செய்தார் மற்றும் செய்வித்தார். இணைந்த சொரூபத்தை யாராலும் தனியாகப் பிரிக்க முடியாது. அத்தகைய நல்ல குழந்தைகள் சதா தங்களை இணைந்த ரூபமாக அனுபவம் செய்கின்றனர். அதைப் பிரிப்பதற்கு யாருக்கும் சக்தி

கிடையாது.

எப்படி சத்யுகத்தில் தேவதைகளுக்கு இயற்கை தாசியாக உள்ளது - அதாவது சதா சமய பிரமாணம் சகயோகியாக இருக்கிறது. அதே போல் நல்ல குழந்தைகளின் சிரேஷ்ட ஸ்திதியின் காரணமாக சர்வ சக்திகள் மற்றும் சர்வகுண சம்பன்ன பிரமாணம் சதா சகயோகி யாக இருக்கின்றனர். அதாவது சர்வசக்திகளின், குணங்களின் இராஜ்ய அதிகாரியாக உள்ளனர். அதோடு கூடவே அத்தகைய நல்ல குழந்தைகளின் சேவையின் விசேஷ சொரூபம் என்னவாக உள்ளது? எப்படி அனைவரும் வாய்மொழி மூலம் அல்லது மனசா-சேவை மூலம் சேவை செய்து கொண்டே இருக்கின்றனர். அதே போல் சேவையை அவர்களும் செய்கிறார்கள். ஆனால் அவர்களின் விசேஷ சேவை இது தான் - சதா மற்ற ஆத்மாக்களுக்குக் கிடைத்துள்ள பாபாவின் குணங்கள் மற்றும் சக்திகளின் தானம் அல்ல, ஆனால் சகயோகம் அல்லது பிராப்தியை அனுபவம் செய்வது. அஞ்ஞானிகளுக்கு தானம் கொடுப்பார்கள் மற்றும் பிராமண ஆத்மாக்களுக்கு சகயோகம் அல்லது பிராப்தி செய்விப் பார்கள். ஏனென்றால் அனைத்திலும் பெரியதிலும் பெரிய தானம் குண-தானம் அல்லது சக்தியின் தானமாகும்.

பலமற்றவர்களை சக்திவான் ஆக்குவது தான் சிரேஷ்ட தானம் அல்லது சகயோகம் ஆகும். ஆக, அந்த மாதிரி சகயோகம் தருவதற்கு வருகிறதா? அல்லது இப்போது பெற்றுக் கொள்வதற்கு யோசிக்கிறீர்களா? இது வரை பெற்றுக் கொள்பவரா அல்லது வள்ளலின் குழந்தை, கொடுப்பவராக ஆகியிருக்கிறீர்களா? அல்லது சில நேரம் பெறுகிறீர்கள், சில நேரம் கொடுக்கிறீர்கள்-அந்த மாதிரியா? கொடுக்கத் தொடங்குகிறீர்கள் என்றால் தானாகவே சம்பன்னமாகி விடுவீர்கள். ஏனென்றால் அனைவருக்கும் அனைத்தும் கொடுத்து விட்டார். கொஞ்சம் தம்மிடம் வைத்துக் கொள்ளவில்லை. அனைத்தையும் கொடுத்து விட்டார். பெற்றுக் கொள்பவருக்கு பராமரிப்பது அல்லது காரியத்தில் ஈடுபடுத்துவதற்கு வருவதில்லை. ஆக, எவ்வளவு கொடுத்துக் கொண்டே செல்கிறீர்களோ, அவ்வளவு சம்பன்னதாவை (நிறைந்த நிலை) அனுபவம் செய்து கொண்டே போவீர்கள். அத்தகைய நல்ல குழந்தை தானே நீங்கள்? நல்லவரின் லைனில் இருக்கிறீர்களா, அல்லது நல்லவர் ஆகப்போகிறவர் களின் லைனில் இருக்கிறீர்களா? எப்படி லௌகிக்கில் கூட தாய்-தந்தை தங்கள் குழந்தை களைக் கைகளில் நடனமாட வைக்கின்றனர், அதாவது சதா குஷியாக வைத்திருக்கிறார்கள். ஊக்கம்-உற்சாகத்தில் வைத்திருக்கிறார்கள். அத்தகைய நல்ல குழந்தைகள் சதா அனைவரை யும் ஊக்கம்-உற்சாகத்தில் நடனமாட வைத்துக் கொண்டே இருப்பார்கள். பறக்கும் கலையில் பறக்க வைத்துக் கொண்டே இருப்பார்கள். ஆக, இந்த வருடததை அவ்யக்த வருடமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். அவ்யக்த வருடம் என்றால் பாபாவின் நல்ல குழந்தை ஆகி நிரூபணம் கொடுப்பவர் ஆக வேண்டும். அத்தகைய நிரூபணம் கொடுக்க வேண்டும், அதாவது கொண்டாட வேண்டும். அவ்யக்தம் என்பதன் அர்த்தமே வ்யக்த உணர்வு மற்றும் வ்யக்த பாவனையிலிருந்து விடுபட்டு இருப்பதாகும்.

வாழ்க்கையில் பறக்கும் கலை அல்லது இறங்கும் கலையின் ஆதாரம் இரண்டே விஷயங்கள் தான். 1. பாவனை 2. பாவம் அல்லது உணர்வு. எந்த ஒரு

காரியத்திலும், காரியத்திற்காக அல்லது காரியத்தைச் செய்கிற மனிதருக்காக பாவனை சிரேஷ்டமாக உள்ளது என்றால் பாவனைக்கான பலனும் கூட சிரேஷ்டமானதாகத் தானாகவே கிடைத்து விடும். ஒன்று, அனைவருக்காகவும் நன்மையின் பாவனை, இரண்டாவது, ஒருவர் எப்படிப் பட்டவராக இருந்தாலும் சதா அன்பு மற்றும் சகயோகம் தருவதற்கான பாவனை, மூன்றாவது, ஊக்கம்-உற்சாகத்தை அதிகரிப்பதற்கான பாவனை, நாலாவது, ஒருவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் சதா என்னுடையவர் என்ற பாவனை மற்றும் ஐந்தாவது, இந்த அனைத்தின் அஸ்திவாரம் ஆத்மிக சொரூபத்தின் பாவனை. இவை தாம் நல்ல பாவனை அல்லது நேர் மறை பாவனை எனச் சொல்லப்படும். ஆக, அவ்யக்தமாவது என்றால் இந்த அனைத்து நல்ல பாவனைகளை வைப்பது. இந்த நல்ல பாவனைகளுக்கு விபரீதமாக ஆகி விட்டால் வ்யக்த பாவம் தன் பக்கமாகக் கவர்ந்திழுக்கும். வ்யக்த பாவத்தின் அர்த்தமே இந்த ஐந்து விஷயங்களின் எதிர்மறை, அதாவது விபரீத ஸ்திதியில் இருப்பது. இதற்கு விரோதமாக இருப்பதை தாங்களே அறிந்திருக்கிறீர்கள். வர்ணனை செய்வதற்கான அவசியம் இல்லை. எப்போது பாவனை எதிர்மறையாக ஆகி விடுகிறதோ, அப்போது அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருக்க முடியாது.

மாயா வருவதற்கான விசேஷமான வாசல் இது தான். எந்த ஒரு விக்னத்தையும் சோதித்துப் பாருங்கள் - அதன் ஆதாரம் அன்புக்கு பதிலாக எதிர்மறை பாவனைகள் தான் இருக்கும். பாவனை முதலில் சங்கல்ப ரூபத்தில் இருக்கும். பிறகு பேச்சாக வரும். அதன் பிறகு கர்மத்தில் வரும். எப்படி பாவனை இருக்கிறதோ, அது போல் மனிதரின் ஒவ்வொரு நடத்தை மற்றும் பேச்சை அதே பாவத்தோடு பார்ப்பார்கள், கேட்பார்கள் அல்லது சம்பந்தத் தில் வருவார்கள். பாவனையால் உணர்வும் மாறி விடும். எந்த ஓர் ஆத்மாவுக்காகவும், எந்த ஒரு சமயத்திலும் பொறாமையின் பாவனை உள்ளது, அதாவது நம்முடையவர் என்ற பாவனை இல்லை என்றால், அந்த மனிதரின் ஒவ்வொரு நடத்தை, ஒவ்வொரு பேச்சினா லும் தவறான புரிதலின் உணர்வு அனுபவமாகும். அவர் நன்றாகத்தான் செய்வார், ஆனால் உங்களது பாவனை நன்றாக இல்லாத காரணத்தால் ஒவ்வொரு நடத்தை மற்றும் பேச்சின் மூலம் உங்களுக்குக் கெட்ட உணர்வு தென்படும். ஆக, பாவனை என்பது உணர்வை மாற்றக்கூடியதாகும். ஆகவே சோதித்துப் பாருங்கள், ஒவ்வோரு ஆத்மாவுக்காகவும் சுப பாவனை, சுப உணர்வு உள்ளதா? உணர்வைப் புரிந்து கொள்வதில் வித்தியாசம் வருவதால் தவறான புரிதல், மாயாவின் வாசல் ஆகி விடுகிறது. அவ்யக்த ஸ்திதியை உருவாக்குவதற்காக விசேஷமாக, தனது பாவனை மற்றும் உணர்வைச் சோதித்துப் பாருங்கள். அப்போது சகஜமாக அவ்யக்த ஸ்திதியில் விசேஷ அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள்.

அநேகக் குழந்தைகள் அசுத்த உணர்வுகளில் இருந்து விலகியும் இருக்கிறார்கள். ஆனால் ஒன்று, சுப உணர்வு மற்றும் பாவனை. இன்னொன்று, வீணான உணர்வு மற்றும் பாவனை. மூன்றாவது, சாதாரண பாவனை மற்றும் உணர்வு. ஏனென்றால் பிராமணர் என்றால் சேவை உணர்வு. ஆக, சாதாரண பாவனை மற்றும் சாதாரண உணர்வு நஷ்டத்தை ஏற்படுத்துவதில்லை. ஆனால் பிராமண வாழ்க்கையின் கடமை சுப பாவனை மூலம் சேவை உணர்வு - அதைச் செய்ய முடிய வில்லை. எனவே பிராமண வாழ்க்கையில் சேவையின் பலன் சேமிப்பதற்கான விசேஷ வரதானம் என்ன உள்ளதோ, அதை அனுபவம் செய்ய

இயலாது. ஆக, சாதாரண பாவனை மற்றும் உணர்வையும் கூட சிரேஷ்ட பானை, சிரேஷ்ட உணர்வாக மாற்றம் செய்யுங்கள். சோதித்துப் பார்ப்பீர்களானால், மாற்றம் செய்வீர்களானால், அவ்யக்த ஃபரிஸ்தா பாப்-சமான் சகஜமாகவே ஆகி விடுவீர்கள். ஆக, புரிந்து கொண்டீர்களா, அவ்யக்த வருடத்தை எப்படிக் கொண்டாடுவது என்று?

சுப பாவனை என்பது மனசா-சேவையின் மிக சிரேஷ்டமான சாதனமாகும். மேலும் சிரேஷ்ட உணர்வு சம்பந்தம்-தொடர்பில் அனைவருக்கும் அன்பானவர் ஆவதற்கான சகஜ சாதனமாகும். யார் சதா ஒவ்வொருவருக்காகவும் சிரேஷ்ட உணர்வை தாரணை செய்கிறார் களோ, அவர்கள் தாம் மாலையின் சமீப மணி ஆக முடியும். ஏனென்றால் மாலை சம்பந்தம்- தொடர்பில் சமீபம் மற்றும் சிரேஷ்டதாவின் அடையாளமாகும். யார் எந்த ஓர் உணர்வோடு பேசினாலும் நடந்தாலும், நீங்கள் சதா ஒவ்வொருவருக்காகவும் சுப உணர்வு, சிரேஷ்ட உணர்வை தாரணை செய்யுங்கள். யார் இதில் வெற்றியாளர் ஆகிறார்களோ, அவர்கள் தாம் மாலையில் வருவதற்கு அதிகாரி ஆகிறார்கள். சேவையின் சேத்திரத்தில் சொற்பொழிவு செய்ய இயலவில்லை என்றாலும், பிளான் தயார் செய்ய இயலவில்லை என்றாலும், யார் ஒவ்வொருவரோடும் சம்பந்தம்-தொடர்பில் சுப உணர்வு வைக்க இயலுமோ, அப்போது இந்த சுப உணர்வு, சூட்சும சேவை உணர்வில் சேமிப்பாகி விடும். அத்தகைய சுப உணர்வுள்ளவர் சதா அனைவர்க்கும் சுகம் கொடுப்பார்கள், அனைவரிடமும் சுகம் பெறு வார்கள். ஆக, இதுவும் சேவை தான் மற்றும் இந்த சேவை உணர்வு முன்னால் நம்பர் பெறுவதற்கான அதிகாரி ஆக்கி விடும். எனவே மாலையின் மணி ஆகி விடுவார்கள். புரிந்ததா? ஒரு போதும் இது போல் யோசிக்கக் கூடாது - நமக்கோ சொற்பொழிவாற்று வதற்கான வாய்ப்பே கிடைப்பதில்லை, பெரிய-பெரிய சேவைக்கான வாய்ப்பு கிடைப்பதில்லை. ஆனால் இந்த சேவை உணர்வின் பொன்னான வாய்ப்பைப் பெறக் கூடியவர்கள் சான்ஸலரின் லைனில் வந்து விடுவார்கள். அதாவது விசேஷ ஆத்மா ஆகி விடுவார்கள். எனவே இந்த வருடத்தில் விசேஷமாக இந்த சுப பாவனை மற்றும் சுப உணர்வை தாரணை செய்வதற்கான விசேஷ கவனம் வைக்க வேண்டும்.

அசுப உணர்வு மற்றும் அசுப பாவனையையும் கூட தனது சுப உணர்வு, சுப பாவனையால் நீங்கள் மாற்றம் செய்ய இயலும். ரோஜா மலர் துர்நாற்றம் வீசும் உரத்திலிருந்து நறுமணத்தை தாரணை செய்து நறுமணமிக்க ரோஜா ஆக முடியும் என்று ஏற்கனவே சொல்லியிருந்தோம் இல்லையா? ஆகவே சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் அசுப, வீணான, சாதாரண பாவனை மற்றும் உணர்வை உயர்ந்ததாக மாற்ற இயலும். அல்லது என்ன செய்வேன், இவருடையது அசுப பாவனை, இவருடைய உணர்வே எனக்காக மிகவும் தீயதாக உள்ளது, நான் என்ன செய்வேன் என்று சொல்வீர்களா? அது போல் பேச மாட்டீர்கள் இல்லையா? உங்களுக்கோ டைட்டிலே உலகை மாற்றுபவர்கள் என்று கொடுக்கப்பட்டுள்ளது. இயற்கையேத் தமோகுணியிலிருந்து சதோகுணி ஆக்க இயலும் எனும் போது ஆத்மாக்களின் உணர்வு, பாவனையை உங்களால் மாற்ற இயலாதா? ஆக, இந்த லட்சியம் தான் பாப்-சமான் அவ்யக்த ஃபரிஸ்தா ஆவதற்கான லட்சணத்தை சுலப மாகவும் தானாகவும் கொண்டு வரும். எப்படி அவ்யக்த வருடத்தைக் கொண்டாட வேண்டும் என்பது புரிந்ததா? ஆக, பிராமணர்களுக்கு நிகழ்காலத்தில் இந்தப் புருஷார்த்தம் தான் விசேஷமாகத்

தேவைப்படுகிறது. மேலும் இந்த சேவை தான் மாலையின் மணிகளை சமீபததில் கொண்டு வந்து மாலையைப் பிரசித்தமாக்கும். மாலையின் மணிகள் தனித் தனியாகத் தயாராகிக் கொண்டிருக் கின்றன. ஆனால் மாலை என்றால் மணிகள், மணிகளின் நெருக்கம். ஆக, இந்த இரண்டு விஷயங் கள் மணிகளோடு மணிகளின் நெருக்கத்துக்கு சாதனமாகும்.

நாலாபுறமும் உள்ள அன்பின் நிரூபணம் கொடுக்கக் கூடிய நல்ல தகுதியான குழந்தை களுக்கு, சதா பாப்-சமான் ஃபரிஸ்தா ஆவதற்கான ஊக்கம்-உற்சாகத்தில் இருக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா அனைவருக்காகவும் சிரேஷ்ட பாவனை மற்றும் சிரேஷ்ட உணர்வு வைக்கக்கூடிய, உலகை மாற்றும் ஆத்மாக்களுக்கு, சதா வெற்றியாளராகி, வெற்றி மாலையில் சமீபத்தில் வரக்கூடிய ரத்தினங்களுக்கு பாப்தாதாவின் அவ்யக்த வருட வாழ்த்துகளுடன் கூடவே அன்பு நினைவு மற்றும் நமஸ்தே!

தாதிகளுடன் சந்திப்பு

ஜானகி தாதியிடம்: தனது தைரியம் மற்றும் அனைவருடைய சகயோகத்தின் ஆசீர்வாதங்கள் சரீரத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன. சமயத்தில் சரீரமும் சகயோகம் கொடுக்கிறது. இதைத் தான் அதிப்படியான ஆசிர்வாதங்களின் உதவி எனச் சொல்வது. ஆக, விசேஷ ஆத்மாக்களுக்கு இந்த அதிகப்படியான உதவி கிடைக்கவே செய்கிறது. கொஞ்சம் சரீரத்திற்கு ஓய்வும் கொடுக்க வேண்டியதிருக்கிறது. ஓய்வு கொடுக்கவில்லை என்றால் அது தொந்தரவு செய்கிறது. எப்படி மற்றவர்கள் என்ன விரும்புகிறார்களோ, அதைக் கொடுத்து விடுகிறீர்கள் இல்லையா? சிலருக்கு சாந்தி வேண்டும், சிலருக்கு சுகம் வேண்டும், சிலருக்கு தைரியம் வேண்டும் என்றால் கொடுக் கிறீர்கள் இல்லையா? ஆக, சரீரத்திற்கு என்ன தேவையோ, அதையும் கொடுங்கள். அதற்கும் ஏதோ தேவைப்படுகிறது இல்லையா? ஏனென்றால் இந்த சரீரமும் கூட அமானத் (நம்பி ஒப்படைக்கப் பட்ட பொருள்) இல்லையா? இதையும் கூடப் பராமரிக்க வேண்டியுள்ளது இல்லையா? நல்ல தைரியத்தோடு நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் மற்றும் நடத்தித் தான் ஆக வேண்டும். சமயத்தில் அவசியத் தின் அனுசாரம் எப்படி சரீரம் உங்களுக்கு சகயோகம் கொடுக்கிறதோ, அது போல் நீங்களும் ஒரு சிறிது சகயோகம் கொடுங்கள். ஞானம் நிறைந்தவராகவோ இருக்கிறீர்கள். நல்லது தான், ஏனென்றால் இந்த சரீரத்தின் மூலம் தான் அநேக ஆத்மாக்களுக்கு நன்மை நடைபெற வேண்டும். உங்களுடைய துணையின் அனுபவத்தால் மட்டுமே அனைவரும் மிக அதிக உதவியை அனுபவம் செய்கிறார்கள். ஆஜராவதும் கூட சேவையில் பங்கெடுத்ததாகிறது. ஸ்தூல சேவை செய்யவில்லை என்றாலும் கூட ஆஜராவதால் சேவையில் பங்கு பெற்ற தாகிறது. ஒரு விநாடி கூட சேவையின்றி இருக்க முடியாது. நீங்கள் அவ்வாறு இருப்பதும் இல்லை. அதனால் சேவையின் சேமிப்புக் கணக்கு சேமிப்பாகிக் கொண்டு தான் இருக்கிறது. மிக நல்ல பார்ட் நடித்துக் கொண்டிருக்கிறீர்கள், நடித்துக் கொண்டே இருப்பீர்கள். நல்ல பார்ட் கிடைத்துள்ளது இல்லையா? இவ்வளவு பெரிய பார்ட் டிராமாவின் அனுசாரம் ஆசிர்வாதங்களின் காரணத்தால் கிடைத்துள்ளது. இது பிராமண ஜென்மத்தின் ஆதி சம்ஸ்காரமாகிய இரக்க மனம் மற்றும் சகயோக பாவனைக்கான பலன் ஆகும். உடலாலோ மனதாலோ இரக்க மனதின் மற்றும் சகயோகத்தின் பார்ட் ஆரம்பத்திலிருந்தே கிடைத் துள்ளது. அதனால் அதன்

பலன் சகஜமாகக் கிடைத்துக் கொண்டிருக் கிறது. சரீரத்தின் சகயோகத்தின் சேவையும் கூட மனதார செய்திருக்கிறீர்கள். அதனால் சரீரத்தின் ஆயுள் இந்த ஆசிர்வாதங்களால் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. நல்லது.

தாதிஜியுடன்: நல்லது, சேவை செய்து விட்டு வந்திருக்கிறீர்கள். இந்த டிராமாவும் சகயோகி ஆகிறது மற்றும் இந்த சுப பாவனையின் பலன் மற்றும் பலம் கிடைக்கின்றது. சங்கட்டன் (குழு) ரூபத்தில் சுப பாவனை இந்த பலனைக் கொடுக்கிறது. ஆக, நன்றாக இருந்தீர்கள், நன்றாக இருக்கத் தான் வேண்டும். இப்போதோ இன்னும் கூட அவ்யக்த ஸ்திதி மூலம் உலகத்தின் ஆத்மாக்களுக்கு இன்னும் சேவையில் முன்னேறுவதற்கான பலம் கிடைக்கும். பிராமணர்களின் திட மாற்றத் திற்காக உலக மாற்றம் நின்று கொண்டுள்ளது. பிராமணர்களின் மாற்றம் சில நேரம் சக்திசாலி யாக உள்ளது. சில நேரம் லேசாக உள்ளது. ஆகவே இந்த (உலகின் கடைசி நேர) குழப்பமும் கூட சில நேரம் வேகமெடுக்கிறது, சில நேரம் மந்தமாகி விடுகிறது. நல்லது. சம்பன்னமாக வேண்டியது இதே பிராமணர்கள் தாம். நல்லது.

சந்திரமணி தாதியுடன்: எல்லையற்ற சக்கரவர்த்தி ஆகி விட்டீர்கள். இன்று இங்கே, நாளை அங்கே! ஆக, இதைத் தான் உலகின் ஆத்மாக்களோடு தானாகவே மற்றும் சகஜ மாகவே சம்பந்தத்தை அதிகப் படுத்துவது என்பது. உலகத்தை இராஜ்யம் செய்ய வேண்டும், விஷ்வ-கல்யாண்காரி. எனவே ஒவ்வொரு மூலையிலும் காலையோ வைக்க வேண்டும் இல்லையா? ஆகவே இந்த தேசத்திலும் மற்ற தேசங்களிலும் வாய்ப்பு கிடைத்து விடுகிறது. புரோகிராமை நீங்கள் தயார் செய்யா விட்டாலும் கூட இந்த டிராமாவின் அனுசாரம் சங்கமயுகத்தின் சேவை வருங்காலத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே எல்லையற்ற சேவை மற்றும் எல்லையற்ற சம்பந்தங் கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன, இன்னும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். ஒரு மாநிலத் தின் ராஜாவோ ஆகக் கூடாது, உலகத்தின் ராஜா ஆக வேண்டும். பஞ்சாபின் ராஜாவாகவோ ஆகக் கூடாது. அதுவோ நிமித்த கடமை, கடமை என உணர்ந்து நிறைவேற்றுகிறீர்கள். மற்றப்படி மதுபன் நிவாசி ஆக வேண்டும் என்று கட்டளையிட்டால் யோசிப்பீர்கள் - பஞ்சாப் என்னவாகும்? அப்படி இல்லை. எது வரை எங்கே கடமை உள்ளதோ, மிக நல்ல முறையில் அதை நிறைவேற்ற வேண்டும்.

ஜானகி தாதியுடன்: இப்போது வெளிநாட்டிலிருந்து இங்கே வந்து விடுங்கள் என்றால் இங்கே அமர்ந்து விடுவீர்கள் இல்லையா? பாபா அனுப்புகிறார், தானே செல்வதில்லை. கடைசியிலோ அனைவரும் இங்கே வந்து தான் ஆக வேண்டும் இல்லையா? எனவே அடிக்கடி வந்து-வந்து பிறகு இருந்து விடுவீர்கள். சுற்றி விட்டு வந்து விடுகிறீர்கள் இல்லையா? ஆகவே விலகியும் இருக் கிறீர்கள், சேவைக்கு அன்பானவராகவும் இருக்கிறீர்கள். தேசம் மற்றும் மனிதர்களுக்கு அன்பானவர் இல்லை. சேவைக்கு அன்பானவர். நல்லது. அனைவருக்கும் நினைவைக் கொடுங்கள். அவ்யக்த வருடத்தின் வாழ்த்துகள் கொடுங்கள்.

வரதானம் : ஞானத்தை ஒளி, சக்தியின் ரூபத்தின் மூலம் சமயத்தில் காரியத்தில் ஈடுபடுத்தக் கூடிய ஞானம் நிறைந்த ஆத்மா ஆகுக.

ஞானம் என்றால் நாலெட்ஜ் மற்றும் நாலெட்ஜ் இஸ் லைட்-மைட் (ஞானம் தான் ஒளி-சக்தி) எனச் சொல்லப் படுகிறது. எப்போது ஒளி,

அதாவது பிரகாசம் உள்ளதோ, அதாவது இது தவறு, இது சரி, இது இருள், இது பிரகாசம், இது வீணானது, இது சக்தி சாலி என்றால் ஒளி மற்றும் சக்தியினால் நிரம்பப் பெற்ற ஆத்மா ஒரு போதும் இருளில் இருக்க முடியாது. இருள் எனப் புரிந்து கொண்டும் கூட இருளில் உள்ளனர் என்றால் ஞானி அல்லது புத்திசாலி எனச் சொல்ல மாட்டார்கள். ஞானம் நிறைந்த ஆத்மா ஒரு போதும் தவறான கர்மங்களின், அல்லது சுபாவ-சம்ஸ்காரங்களின் வசமாக ஆக மாட்டார்கள்.

சுலோகன்: ஹீரோ பார்ட் நடிப்பதற்காக ஜீரோ பாபாவுடன் இணைந்தவராகி (கம்பைன்டு) இருங்கள்.